அடையாள இலக்கம்:

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

<u>மத்தியபிரிவு</u>
(8-10 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 1.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

அ) கீறிட்ட இடங்களைப் பொருத்தமான ஓர் எழுத்தைக் கொண்டு நிரப்புக.

***புள்ளிகள் : 20***

1. செவ் ____ ய்க்கிழமை
2. சங்கீ ____ ம்
3. பச் ____ நிறம்
4. சூ ____ யன்
5. வி ____ யாட்டுப்போட்டி
6. கட ____ கரை
7. அ ____ சாமை
8. க ____ ணம்
9. தேங் ____ ய்
10. வா ____ ப்பழம்

| புள்ளிகள் | |
|---|---|

ஆ) கீழே கோடிடப்பட்ட சொல்லுக்கு, வாக்கியத்திற்கேற்ற ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதவும். புள்ளிகள் : 15

1. நான் விளையாடும்போது <u>மகிழ்ச்சி</u>யடைவேன்
   1. சந்தோசம் 2. கோபம்
   3. சினம் 4. பரவசம் (………………..)

2. <u>உண்மை</u> பேசுவது நல்லது
   1. பொய் 2. மெய்
   3. சத்தியம் 4. கதை (………………..)

3. <u>பூக்கள்</u> காலையில் மலரும்
   1. மொட்டுகள் 2. மலர்கள்
   3. செடிகள் 4. கொடிகள் (………………..)

4. <u>பழங்கள்</u> உண்பது உடலுக்கு நல்லது
   1. காய்கறிகள் 2. கீரை
   3. வாழைப்பழம் 4. கனிகள் (………………..)

5. கல்வியறிவு வளர்ந்த போதும் <u>போர்</u> செய்வதை மக்கள் இன்னும் விடவில்லை
   1. சண்டை 2. பயிற்சி
   3. கோபம் 4. சமாதானம் (………………..)

6. <u>சூரியன்</u> கிழக்கில் உதிக்கும்
   1. ஞாயிறு 2. சந்திரன்
   3. சுக்கிரன் 4. வியாழன் (………………..)

7. தமிழர்கள் <u>நகைகள்</u> அணிவதை விரும்புவார்
   1. ஆபரணங்கள் 2. மேகலை
   3. சங்கிலி 4. ஆடை (………………..)

8. மாணவர்கள் <u>தினமும்</u> படிக்க வேண்டும்
   1. கிழமையும் 2. நாள்தோறும்
   3. மாதமும் 4. வருடமும் (………………..)

9. ஒரு <u>குதிரை</u> பந்தயத்தில் வென்றது
   1. கரி 2. அரி
   3. பரி 4. நுரி (………………..)

10. என் அம்மா ஆசிரியத் <u>தொழில்</u> செய்கிறார்
   1. வேலை 2. பயிற்சி
   3. வியாபாரம் 4. கலை (………………..)

| புள்ளிகள் | |
|---|---|

இ) கீழே கோடிடப்பட்ட சொல்லுக்கு, வாக்கியத்திற்கேற்ற எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. ***புள்ளிகள் : 15***

1. அரசன் <u>நீதி</u> ஆக ஆட்சி செய்வதையே மக்கள் விரும்பினர்

    1. அநீதி  2. தகுதி
    3. செங்கோல்  3. தர்மம்  (………………..)

2. மரங்கொத்திப் பறவைக்கு <u>நீண்ட</u> அலகு உள்ளது

    1. பலமான  2. மென்மையான
    3. மஞ்சள்நிறமான  4. குறுகிய  (………………..)

3. சிலர் <u>இரவு</u> நேரங்களிலும் கண்விழித்து உழைக்கின்றனர்

    1. வெயில்  2. மழை
    3. பகல்  4. பனி  (………………..)

4. மாணவர்கள் ஆசிரியரிடம் <u>கேள்வி</u> கேட்டு சந்தேகங்களைத் தீர்க்கின்றனர்

    1. பதில்  2. வினா
    3. பாடங்களை  4. விற்றார்  (………………..)

5. அம்மா கடையில் பொருள்களை <u>வாங்கினார்</u>.

    1. எடுத்தார்  2. கொடுத்தார்
    3. மாற்றினார்  4. விற்றார்  (………………..)

6. சிறந்த மாணவர்கள் பள்ளிக்குப் <u>பெருமை</u> சேர்க்கின்றனர்

    1. வெளிச்சம்  2. சிறுமை
    3. பிரகாசம்  4. தனிமை  (………………..)

7. மாணவர்கள் சிலர் படிப்பில் முன்னேற்றம் அடைவதற்கு <u>மறதி</u> தடையாக உள்ளது

    1. நினைவு  2. விவேகம்
    3. புத்தி  4. வெளியேறினான்  (………………..)

8. கண்ணன் பல போட்டிகளில் <u>வென்றான்</u>

    1. தோற்றான்  2. வெற்றிபெற்றான்
    3. பரிசுபெற்றான்  4. வெளியேறினான்  (………………..)

9. வீட்டுக்கு <u>வெளியேயும்</u> சுத்தம் காக்க வேண்டும்

    1 உள்ளேயும்  2. புறத்தேயும்
    3. அகத்தேயும்  4. நடுவினுள்ளும்  (………………..)

10. வாத்து முட்டை <u>பெரியது</u>

    1. வட்டமானது  2. வெள்ளைநிறமானது
    3. சிறியது  4. அழகானது  (………………..)

| புள்ளிகள் | |
|---|---|

அடையாள இலக்கம்:

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

**மத்தியபிரிவு** (8-10 வயதுப் பிரிவு)

ஈ) கீழே உள்ள பொருத்தமான சொற்களைத் தெரிந்து எடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க. கொடுக்கப்பட்ட சொற்களை ஒருமுறை மாத்திரமே உபயோகிக்கலாம். புள்ளிகள் : 20

**நட்சத்திரங்கள், கூவும், அலகுகளால், குளிர்ச்சியாக, சத்துள்ள, கற்றது, அனுபவம், குறுகிய, அண்ணன், பச்சை**

1. ____________________ புல்வெளிகள் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன.

2. உடல் ஆரோக்கியமாக இருக்க ____________________ உணவுகளை உண்ண வேண்டும்.

3. வானவெளியில் ____________________ மின்னுவதை நாம் இரவில் பார்க்கலாம்.

4. சேவல் காலையில் ____________________.

5. வயதில் மூத்த சகோதரனை ____________________ என நாம் அழைக்கின்றோம்.

6. ____________________ இருப்பது தண்ணீரின் இயல்பு.

7. பறவைகள் தமது ____________________ இரையை உண்கின்றன.

8. கங்காருவின் முன்னங்கால்கள் ____________________ தாகவும் பின்னங்கால்கள் நீண்டதாகவும் இருக்கின்றன.

9. நம் நாட்டு மூத்தகுடிமக்கள் தொழிலிலும் வாழ்விலும் அதிக

…………………… பெற்றவர்கள்.

10. …………………… கைமண்ணளவு, கல்லாதது உலகளவு.

| புள்ளிகள் | |
|---|---|

உ) கீழே தரப்பட்ட சொற்கொத்து ஒவ்வொன்றிலும் கொடுக்கப்பட்ட சொற்களை உபயோகித்துச் சரியான வசனம் அமைத்து எழுதுக

புள்ளிகள் : 30

1. அழைத்து | அப்பா | சென்றார் | வெளியே | என்னை

……………………………………………………………………

2. என் | இருக்கிறது | வீட்டில் | மாமரம் | ஒரு

……………………………………………………………………

3. பிறந்தநாள் | எனக்கு | கிடைத்தது | பரிசு

……………………………………………………………………

4. தமிழில் | மொழி | பெயர்க்கப்பட்டிருக்கின்றது | பல மொழிகளிலும் | எழுதப்பட்ட | திருக்குறள்

……………………………………………………………………

……………………………………………………………………

4. விளையாடுவேன் | தங்கையுடன் | நான் | எனது | சேர்ந்து

……………………………………………………………………

5. பழங்களை | நான் | சாப்பிடுவேன் | விரும்பி

……………………………………………………………………

6. ஒரு | நல்ல | படிப்பது | காலையில் | நாம் | பழக்கம்

……………………………………………………………………

7. நாம் | சுகமாக | வாழலாம் | சுத்தமாக | இருந்தால்

……………………………………………………………………

9. கடும்மழை | நேற்று | காற்றுடன் | பெய்தது

……………………………………………………………………

8. மருத்துவரிடம் | சென்றேன் | தாத்தாவை | நான் | அழைத்து

……………………………………………………………………

| புள்ளிகள் | |
|---|---|

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|